REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 25உ செவ்வாய் (10—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 26உ புதன் (11—9—57) [இதழ் 75

## 27,000 பேர் இடம் பெயர நேருமாம்!

புதுடில்லி, செப். 9—

"நெய்வேலியில் சுரங்க வேலைகள் நடைபெறுவதை ஒட்டி, 1960-ம் ஆண்டில், சுமார் 27,000 பேர் இடம் பெயர நேரிடும்" என்று, மக்கள் சபையில் மந்திரி சர்தார் சுவரண் சிங் தெரிவித்திருக்கிருர்.

இப்படி இடம் பெயர நேரிடுகிற மக்கள், பண்டித நேருவிடம் தந்துள்ள கோரிக்கை மனு, சர்க்காரின் கவனத்தைப் பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நங்கவரம் அறப்போர் பெற்ற மகத்தான வெற்றி

## சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்க நிலப்பிரபுக்கள் சம்மதம்

### விவசாயிகள் போராட்டம் நேற்றுடன் நிறுத்தப்பட்டது

திருச்சி, செப். 10—

குளித்தலை வட்ட விவசாய முன்னேற்ற சங்கத்தினரின் கோரிக்கைகளை ஏற்க நிலப்பிரபுக்கள் சம்மதம் தெரிவித்ததின் பேரில், கடந்த மூன்று வாரங்களாக நங்கவரம் பகுதியில் நடைபெற்று வந்த விவசாயிகளின் அறப்போர் நேற்றுடன் நிறுத்தப்பட்டிருக்கிறது.

குளித்தலை வட்ட விவசாய முன்னேற்ற சங்கத்தவர் முன்னின்று நடத்திய அந்த அறப்போர், மகத்தான வெற்றி பெற்று, வட்டார விவசாயிகளுக்குப் பாதுகாப்பும், வாழ்வும் தேடித் தந்திருக்கிறது:

நிலப்பிரபுக்கள், 'விவசாயிகளை எக்காரணத்தாலும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதில்லை' என்று ஒப்புக்கொண்டனர்.

நங்கவரம் பகுதியில், 53 விவசாயிகளுக்குத் தலைக்கு ஒன்றரை ஏகர் வீதம் 79½ ஏகர் நிலத்தை, 60—40 நியாய வாரச் சட்டப்படி, குத்தகைக்குவிடவும் நிலப்பிரபுக்கள் சம்மதித்தனர்.

மேலும் 50 ஏகர் நிலத்தை, நியாயவாரச் சட்டத்திற்கு முந்திய பழைய முறையான மாட்டுவார முறையில் விவசாயிகளிடம் பயிர்செய்ய ஒப்படைக்கவும் நிலப் பிரபுக்கள் சம்மதித்திருக்கின்றனர்.

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் தலைமையில் திரண்டு அறப்போரில் ஈடுபட்டிருந்த விவசாயிகளிடையேயும், நிலப் பிரபுக்களிடையேயும் இந்த சமாச ஏற்பாடு உருவாவதற்காக, கரூர் உதவிக் கலெக்டர் ஈ. எஸ். நாகேசன் அவர்கள் முன்னின்று பேச்சுவார்த்தைகளை நடத்தி வைத்திருக்கிருர்.

நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, விவசாயிகள் சார்பில் தோழர்கள் அன்பில்-தர்மலிங்கம், முத்துக்கிருஷ்ணன், முத்து ஆகியோர் வாதாடினர்.

★

### நன்றி அறிவிப்பு

சங்கம் முன்னின்று நடத்தி வெற்றி கண்டுள்ள விவசாயிகளின் அறப்போருக்கு உறுதுணையாயிருந்து உதவிய அனைவருக்கும் — குறிப்பாக, திருச்சி மாவட்ட தி. மு. கழகம், தி. மு. க. தலைமை நிலையம், மற்றும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான மு. கருணாநிதி ஆகியோருக்கு குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கத்தார், தங்களின் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## இந்தித் திணிப்புக்கு எதிராக மாணவர் எழுச்சி!

### சென்னையில் 1,600 கல்லூரி மாணவர்கள் கண்டன ஊர்வலம்

சென்னை, செப். 10—

தமிழ்நாடெங்கிலும், இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கை வெளியான பிறகு, இந்தித் திணிப்பிற்கு எதிராக, மாணவர்கள், தொடர்ச்சியாகக் குரல் தந்து வருகின்றனர்.

தமிழகத்தின் பல கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தி, தங்களது எதிர்ப்பினை முறையாகத் தெரிவித்து வருகின்றனர்.

இன்று, சென்னை அரசினர் கலைக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 1,000 மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல், அணிவகுத்து, வடவரின் இந்தி வெறியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்று, சென்னை மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 600 மாணர்கள், இந்தித் திணிப்புக்கு எதிராக, கல்லூரிக்குச் செல்லாது வேலை நிறுத்தம் செய்து, கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள், இந்தித் திணிப்பிற்கு எதிரான வாசகங்கள், தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் பொறிக்கப் அட்டைகளை ஏந்திக்கொண்டு ஊர்வலம் வந்தனர். அவர்கள், 'தமிழுக்கு முதலிடம் வேண்டும்' என்றும் குரல் எழுப்பினர்.

★

### காஞ்சி மாணவர் கிளர்ச்சி

காஞ்சி, செப். 7—

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கடந்த வியாழனன்று, இந்தித் திணிப்பிற்கு எதிராக, கல்லூரிக்குச் செல்லாமல் வேலைநிறுத்தம் செய்து, நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் நடத்தினர்.

இந்தித் திணிப்பிற்கு எதிராக மாணவர்கள் குரல் எழுப்பி, தங்கள் கண்டனத்தை வெளியிட்டனர்.

## காசி சனாதனிகள் போக்கு

### தாழ்த்தப்பட்டோர் ஆலயம் செல்லத் தடை!

### விசுவநாதரைக் காணுமலே கவர்னர் திரும்பிவிட்டாராம்!

வாரணசி, செப். 8—

காசிவிசுவநாதர் ஆலயத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார், உ. பி. கவர்னர் வி. வி. கிரி!

செய்தி அறிந்ததும், தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர், தாங்களும் கவர்னருடன் ஆலயம்புக எண்ணி கோவில்வாயிலில்காத்திருந்தனர்.

(5-ம் கலம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோக விதிமுறை மாறுமா?

### 'கொல்வதற்காகவே சுடு' என்ற போக்கு கைவிடப்படுமா?

### டெல்லி சர்க்கார் ஆலோசிப்பதாக மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, செப். 9—

'கொல்லுவதற்காகவே சுடுவது' என்ற போலீசாரின் துப்பாக்கிப் பிரயோக முறையில் சிறு மாற்றம் ஒன்றைச் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட விதியைத் திருத்துவதற்கு டெல்லி சர்க்கார் உத்தேசித்திருக்கிருர்களாம்!

இந்தத் தகவலை மக்கள் சபையில் தந்த உள்நாட்டிலாகா மந்திரி பண்டித பந்த், 'துப்பாக்கிப் பிரயோகங்களால் ஏற்படும் உயிர்ச் சேதமும், படுகாயங்களும் மிகக் குறைவானதாக அமையும்வண்ணம் விதிகள் திருத்தப்படும்' என்று கூறியிருக்கிருர்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் சில தகவல்களைத் தந்திருக்கிருர் :—

"இப்போதுள்ள விதிகளின்படி, முழங்காலுக்கு மேல் நோக்கித்தான், துப்பாக்கிகள் திருப்பப்படுகின்றன ; குறிவைக்கப்படுகின்றன.

"முன்பு, இந்த விதிகள் வேறு விதமாக இருந்தன ; அதாவது சட்டவிரோதமான ஒரு கூட்டத்தின்மீது துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றால், கூட்டத்தினரை, கீழ் நோக்கித்தான் சுடுவார்கள் ; அதனால் கூட்டத்தினர், தாங்கள் உடனே கலைந்து ஓடாவிட்டால் தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிடக்கூடும் என்று உணர்வர்."

"மேலும், 'நேராக மக்களின் மார்பு நோக்கித்தான் சுட வேண்டும்; கொல்லுவதற்காகவே சுட வேண்டும் என்று மாநில மந்திரிகள் கூறியிருப்பது உண்மை தானு?' என்று கேட்கப்பட்டபோது, மந்திரி பந்த், 'இப்போதுள்ள சட்டப்படி முழங்காலுக்கு மேலே சுடலாம்; ஆனுல், துப்பாக்கிப்பிரயோகத்திற்கான அவசியமே நிகழாமலிருக்க வேண்டும் என நாங்கள் விழைகிறேம்' என்று கூறியிருக்கிருர்.

'துப்பாக்கிப் பிரயோகங்களால் முழங்காலுக்கு மேல் எவரும் காயம்படாதபடி பார்த்துக்கொள்ளும்வகையில் விதிகள் திருத்தப்படுகின்றனவா?' என்று கேட்கப்பட்டபோது, 'மக்களின் உயிருக்கு ஆபத்து நேரிடும்வண்ணம் அவர்கள் தாக்கப்படுவதை சர்க்கார் விரும்பவில்லை; ஆனுல் அப்படிச் சொல்லிவிட்டால் மக்கள், தொடர்ந்து, தானே இதர உறுப்பினர்களோ விரும்பாதவகையில், போலீசாரின் உத்தரவுகளை மீறிக்கொண்டிருக்கக்கூடும்' என்றும் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிருர்.

'விதிகள் திருத்தப்படுவதினுல், டம் டம் குண்டுகளும், 'ரைபின்'களும் உபயோகப்படுத்துவது நிறுத்தப்படுமா?' என்று கேட்கப்பட்டபோது அவர், ஏற்கனவே 'ரைபின்'களுக்குப் பதிலாக, 'மஸ்கெட்' துப்பாக்கிகளை உபயோகிக்கலாம் என்று கூறியிருப்பதாகவும், அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் டம் டம் குண்டுகள் உபயோகிக்கப்படவில்லை எனத் தான் கருதுவதாகவும் கூறியிருக்கிருர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

### நாடு நகைக்குது!

காளை முட்டும் நாளை என்று
தாளைப் பற்றிச் சொன்ன அன்று
வாளைக் காட்டி வல்லமை பேசி
கொள்ளும் புல்லும் நிரம்ப வைத்து
கொஞ்சிக் குலவி மகிழ்ந்தோர்கள் ;
'குத்த வருகுது! குத்த வருகுது!
மெத்தப் பொல்லா காளை, காணீர்!
அடக்கிட வாரீர் அறிவுடையோரே!'
என்றே கூவி அழைப்பது கண்டு,
நாடு நகைக்குது! மாடு சிரிக்குது!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

(1-ம் கலத்தின் தொடர்ச்சி)

இதைக் கண்டதும், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயத்திற்குள் நுழையாமல் பார்த்துக்கொள்வதற்கென சனாதன வெறியர் பலர் கோவில் வாயிலில்கூடி, வழியை அடைத்துக்கொண்டனராம்!

இந்தத் தகவல் அறிந்ததும் கவர்னர் கிரி, கோவிலுக்குச் செல்லும் திட்டத்தையே கைவிட்டுவிட்டாராம்!

'ஆலயப் பிரவேசத்தை ஒட்டி இப்படி ஒரு அரசியல் போராட்டம் இருப்பது எனக்குத் தெரியாது' என்றும், கவர்னர் கூறினாராம்!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—9—57 செவ்வாய்

# அறிகுறி மறைகிறது! மூலநோய் நிலைத்திருக்கிறது !!

ஒருவன் தென்னை மரம் ஏறினான்; தென்னை மரத்திற்கு உரிமை உடையவன், 'என்னுடைய தென்னை மரத்தில் ஏன் ஏறினாய் நீ' என்று கேட்டான். 'புல் பறிக்க தென்னை மரம் ஏறினேன்' என்று சொன்னான் அவன். 'தென்னை மரத்தில் புல் இருக்குமா?' என்று மரத்துக்குடையவன் வினவினான். 'புல் இல்லாததினால் தான் இறங்கிவிட்டேன்' என்று அவன் கூறினான்.

இப்படி, தன் கள்ளத்தனத்தை மறைத்துக்கொள்ள எண்ணிய ஒருவன் கூறினதாகக் கதை ஒன்று உண்டு.

இதுபோலத்தான், 'சுதந்தரப் பயணம்' என்ற பெயரில் தாம் எடுத்த திரைப் படத்தில், தென்னக உரிமைப் போராட்டச் சம்பவங்களைக் குறிப்பிடத் தவறியதற்கு, இந்தியப் பேரரசு கூறியுள்ள சமாதானமும்.

1857-ம் ஆண்டை அடிப்படையாகக்கொண்டு சுதந்தரத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற காரணத்தினால், அந்த ஆண்டைத் தொடர்ந்து ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த வரலாற்றுச் சம்பவங்களை மட்டுமேதான் திரைப்படமாக்கிக் காட்ட வேண்டும்; அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிகழ்ந்துள்ள ஆங்கில ஆதிக்க எதிர்ப்புச் சம்பவங்களைத் திரைப்படமாக்கக்கூடாது என எவரும் கூறத் துணியார்.

அப்படி இரண்டு காலச் சம்பவங்களையும் கொண்டுள்ள திரைப் படத்தைக் காணப் பொதுமக்கள் மறுப்பதுடன், எதிர்க்கவும் செய்வர் என எண்ணுவதும் பேதமையாகும். அதுவுமன்றி, 1857-ல் நடைபெற்ற ஆதிக்க எதிர்ப்புச் சம்பவங்களை மட்டும் மக்கள் தெரிந்து கொண்டால் போதும்;

தாக இருக்கின்றது என்பதை, அதே படத்தை எடுப்பதில் இந்தியப் பேரரசு கடைபிடித்துள்ள மற்றொரு போக்கையும் கொண்டு ஆராய்வோம்.

வடநாட்டில் காங்கிரசு மேற்கொண்ட விடுதலை போராட்டச் சம்பவங்கள் முழுவதும் அத்திரைப் படத்தில் இடம் பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாது வடநாட்டு மதத் தலைவர்கள், சீர்திருத்தத் தலைவர்கள் உள்ளிட்ட காங்கிரசுக் கட்சித் தலைவர்களின் திருவுருவங்களும் இடம் பெற்றுள்ளன. ஆனால், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த தென்னாட்டுத் தலைவர்களின் திருவுருவங்கள் ஒன்றுவது அத்திரைப் படத்தில் இடம்பெறவில்லை. அதுபோன்றே, தென்னாட்டில் காங்கிரசு நடத்திய அறப்போராட்டங்களை விளக்கிக் காட்டும் சம்பவங்கள் ஒன்றுவது அப்படத்தில் இடம் பெறவில்லை.

ஏதோ இத்தவறு குருட்டுப் போக்கில் ஏற்பட்டுவிட்டதல்ல; திட்டமிடப்பட்டு செய்துள்ள இருட்டடிப்பே இது. இது தான் உண்மை. இதைக் கொண்டு பார்க்குமிடத்து, திரைப்படத்தில் நமது காலத்துக்கு முந்திய தென்னாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புச் சம்பவங்கள் இருட்டடிக்கப்பட்டிருப்பதற்குரிய பொருத்தமான காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்பது நமக்கெல்லாம் புரிந்துவிடும்.

இவ்விழிச் செயலை, திட்டமிட்டுச் செய்யப்பட்ட இருட்டடிப்பு என நாம் குறிப்பிட்டிருப்பதற்கு ஒரே ஒரு பொருள்தான் உண்டு; அதாவது, 'தாங்கள் ஆளப்பிறந்தவர்கள்—தென்னகத்தார், ஆளப்படவேண்டியவர்கள்' என்ற ஆணவக் கோட்பாட்டில் வடநாட்டார் பன்னெடுங்காலமாக

# 'தருணம் இதுவே! தமிழரே எழுவீர்!'

## 'வடவர் ஆதிக்கம் வளர்வது கண்டேன்'

## 'இந்தியைத் திணித்திட துடிக்கின்றனர் அங்கே'

## 'தமிழ் மொழி மீது வெறுப்பு கக்குகின்றனர்'

## 'இந்தியை எதிர்த்திட இன்றே முனைவீர்'

### டாக்டர் ஆர். பி. சேதுப்பிள்ளை போர் முழக்கம்

கோவை, செப். 9—

"தமிழ் மொழியின் தனிப்பெரும் சிறப்பையும், அதன் வளத்தையும் வடநாட்டினர் உணராமல், அதைக் குறைகூறுகின்றனர்.

"முதிர்ச்சியடையாத இந்தி மொழியைத் தென்னகத்தின்மீது திணிக்க முயல்வதைத் தமிழர்கள் வன்மையாக எதிர்க்க வேண்டும்; எதிர்ப்பதற்கு இதுவே தருணமாகும்"

என்று, சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கோவையில் தனக்குப் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தபோதுகூறி, தமிழர்களுக்கு உணர்ச்சியூட்டும் வகையில் சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறார்.

கோவை, நன்னெறிக் கழகத்தின் சார்பில் பேராசிரியர் சேதுப்பிள்ளைக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

இவ்விழாவுக்கு நன்னெறிக் கழகத் தலைவரும் பிரபல ஆலை அதிபருமான திரு. பி. எஸ். சோமசுந்தரம் (செட்டியார்) தலைமை வகித்தார்.

தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பினுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பேசிய சேதுப்பிள்ளை அவர்கள் மேலும் கூறியதாவது:-

"தமிழின் பழம் பெருமையையும், அதன் வளத்தையும் வடநாட்டார் குறைகூறும் நிலை இப்பொழுது அங்கு ஏற்பட்டுள்ளது. தேவையான கலைச் சொற்கள் இந்தியில் இல்லாதிருந்தும், தமிழிலிருந்து அத்தகைய சொற்களை எடுத்துக் கொள்ள வடநாட்டினர் விரும்பவில்லை.

"அரசியல் சட்டத்தை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பொருட்டு டில்லியில் கூட்டப்பட்ட மாநாடு ஒன்றில் தமிழ் மொழியின் சார்பில் நான் கலந்துகொண்டேன்; அப்பொழுது இந்த நிலை அங்கு நிலவியதை நான் உணர்ந்துகொள்ள நேரிட்டது.

"இந்த நிலையே தொடர்ந்து நீடிக்குமானால், வளமற்ற இந்தி மொழியைத் தென்னாட்டார் மீது திணிக்க முற்படுவதைத் தமிழர்கள் வன்மையாக எதிர்த்தே தீரவேண்டும்; அதற்கு இதுவே தக்க தருணம்.

"தமிழ் இன்று மறுமலர்ச்சி பெற்று வருகிறது. சங்க இலக்கியங்களில் உள்ள பல தூய தமிழ்ச் சொற்கள், இன்று சாதாரணமாக நடைமுறைப் புழக்கத்தில் கொண்டு வரப்பட்டுவிட்டன. இது எனக்கு மிகவும் உவகையளிக்கிறது. தமிழ் மொழி தன் இடத்தை இன்றைய அரசியலில் பெற்றுவருவதைக் கண்டும் மகிழ்ச்சியடைகிறேன்."

# வெளிநாட்டிலும் ஆள் குறைப்பு!

### இந்திய தூதுவர் அலுவலகங்கட்கு அறிவிப்பு

புதுடில்லி, செப். 7—

வெளிநாடுகளில் இந்திய அரசாங்கத் தூதுவர் செயலகங்களில் இந்தியரும், அந்தந்த வட்டாரத்தினரும் பணியாற்றுகின்றனர்; அவர்களின் எண்ணிக்கையைக் கூடுமானவரை குறைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் தாக்கீது அனுப்பியுள்ளதாம்.

அந்தந்த வட்டார மக்களுக்குப் பதிலாக இந்தியர்களையே அமர்த்திக்கொள்ளவும் யோசனை கூறப்பட்டுள்ளது; இதனால் அதிகப் பாதுகாப்பு ஏற்படும் என்று அரசாங்கம் நம்புகிறது.

இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதவர் அலுவலகத்தில் மட்டும் 1,288 பேர் பணியாற்றுகின்றனர்; அவர்களில் 774 பேர் இந்தியர்கள்; 514 பேர் அந்நியர்கள்.

இங்கிலாந்தின் ஹை-கமிஷனர் பொதுவர ஊழியர்கள் ஊதியத்தை உயர்த்தியதால், இந்திய அரசாங்கமும் தனது தூதுவர் அலுவலகத்தில் பணியாற்றும் அந்நியருக்கு ஊதியத்தை உயர்த்துவதற்கு அதிகப் பணம் ஒதுக்கியுள்ளது.

1956-ல், அந்நியர்களுக்கும்,

### மக்கள்சபையில் கழக உறுப்பினர்

### ஆர். தருமலிங்கம் கேள்விகள் :

# சென்னையில் 69 அஞ்சல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றனவாம்!

## 1950-56 வரை ரூ. 4,89,600 வாடகையாகத் தரப்பட்டுள்ளதாம்

"சென்னை நகரத்தில் எத்தனை அஞ்சல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றன?

"1950 முதல் 1956 வரை வாடகைக்காக அரசாங்கம் எவ்வளவு பணம் செலவழித்துள்ளது?

"இந்த அஞ்சல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா?

"இருப்பின், எத்தனை கட்டப்படுகின்றன? இதுவரை எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டுள்ளது?"

விடப்படுமாம்.

சேலம் மாவட்டத்தில் ஒரு தேசிய அபிவிருத்தி நிறுவனம், மேட்டூர் பகுதியில் ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டமும் உள்ளதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ரூ. 12·19 கோடி கிராம சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

மக்கள் சபையில், தோழர் ஆர். தருமலிங்கம் கேட்ட கேள்வி

ங்களைப் பொதுமக்கள் ந்துகொள்ளத் தேவையே ல எனக் கருதுவதும், முன் குறிப்பிட்டுள்ளதிலும் ப் பேதமையாகும்.

சுதந்தரப் பயணம்' என்ற ரப்படம் மிக நீளமாக க்கக்கூடாது; அப்படி நீள இருக்குமானால், அதைக் லும் மக்கள் சலித்துக் ள்ளுவர்; எனவே, மக்களை ப்படையச் செய்யக்கூடாது றநல்லெண்ணத்தினால்தான் தியப் பேரரசால் எடுக்கப் டுள்ள திரைப் படத்தில் 7-ம் ஆண்டுக்கு முற்பட்ட னிய ஆதிக்க எதிர்ப்புச் வங்கள் கைவிடப்பட்டுள் என்ற வாதத்தை சிலர் ப்பினும் கிளப்பக்கூடும் படி கிளப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சுதந்தரப் பயணம்' என்ற ரப் படத்தில், நமது காலத் கு முற்பட்ட வரலாற்றுச் வங்கள் விடுபட்டுவிட்ட து, இந்தியப் பேரரசின் பில் கூறப்படும் சமாதானம் அளவு பொருந்தக்கூடிய

வளர்ந்து வந்திருக்கின்றனர். அதே பரம்பரைப் பழக்கத்திற்கு வடநாட்டில் உள்ள தலைவர்கள் எனப்படுவோர் தங்களை முழு அடிமைகளாக ஆக்கிக் கொண்டுள்ளனர்.

அந்த ஆணவ அடிமைத் தனம் மூலநோய்—திரைப்படத்தில் தென்னாட்டவரை திட்டமிட்டு இருட்டடித்திருப்பது பயங்கரமான அறிகுறி.

திரைப்படம் திரும்பப் பெறப்படுவதானது, அப்பயங்கரமான அறிகுறி தென்னாட்டவர் கண்ணிலும் கருத்திலுமிருந்து மறைக்கப்படுகிறது என்று பொருள். மூலநோய் அப்படியேதான் இருக்கிறது; அதற்குரிய அறிகுறிதான் இப்பொழுது தற்காலிகமாக மறைகிறது.

### சேலத்தில் அடிஷனல் செஷன்சு நீதிமன்றம்

சேலம், செப். 9—

சென்னை உயர் நீதிமன்ற சிபாரிசுக்கிணங்க சேலத்தில் தற்காலிகமாக அடிஷனல் மாவட்ட செஷன்சு நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்த சென்னை மாநில அரசினர் உத்தரவிட்டுள்ளனர். இந்த நீதிமன்றம், ஆரம்பிக்கப்படும் தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு வேலை செய்யும்.

இந்தியர்களுக்கும் ஒரேமாதிரியான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.

மக்கள்சபையில் பண்டித நேரு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

### கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை

சென்னை, செப். 9—

இலங்கைக்குக் கள்ளத்தனமாகச் சென்று குடியேறுவதைத் தடுக்க விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் 35 இடங்களில் சோதனை போடப்பட்டு, குடியேறவிருந்த 51 நபர்களும், 31 தரகர்களும், 2 படகோட்டிகளும், ஒரு படகுச் சொந்தக்காரரும் கைது செய்யப்பட்டனர்.

கள்ளத்தனமாகக் குடியேறினவர்கள் என்பதற்காக 139 பேர் இலங்கை அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்டு தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர்; அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் 25 தரகர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

என்று, தோழர் தருமலிங்கம் அவர்கள் மக்கள் சபையில் வினாக்கள் எழுப்பினர்.

மத்திய போக்குவரத்து அமைச்சர் திரு. இராஜ் பகதூர் இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் 69 அஞ்சல் நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்குகின்றன என்றும், 1950-56 வரை ரூ. 4,89,600 வாடகை தரப்பட்டுள்ளது என்றும், அஞ்சல் இலாகாவுக்கு இரண்டு சொந்தக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஆராயப்படுகிறது என்றும் கூறினர்.

★

# பெரிய-நடுத்தரத் தொழில்கள்

### சென்னைக்கு ஒதுக்கப்பட்ட தொகைபற்றி தகவல்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், பெரிய—நடுத்தரத் தொழில்களுக்கென சென்னை மாநிலத்திற்கு ரூ. 83·75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

இதில், ரூ. 76 இலட்சம் செலவில் கூட்டுறவு முறையில் நான்கு சர்க்கரைத் தொழிற்சாலைகள் நிறுவப்படுமாம்; மரத்தொழிலுக்கு ரூ. 7.75 இலட்சம் செல

ஒன்றுக்கு ... தொழில் அமைச்சர் தேசாய் தெரிவித்துள்ளார்.

★

# தென்னாட்டில் நிறுவும் நோக்கம் இல்லையாம்!

### பீகாரில்தான் நிறுவப்படுமாம்

"இந்திய அரசாங்கம், ஒரு வெளிநாட்டு நிறுவனத்துடன் 'பிளக்கும் வெடி மருந்து' தயாரிப்பதற்கான உடன்பாடு செய்து கொண்டுள்ளதா?

"பீகாரில் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலை போன்று தென்னாட்டில் ஒரு 'பிளக்கும் வெடிமருந்து' உற்பத்திச்சாலையை ஏற்படுத்தும் திட்டம் உண்டா?"

என்று தோழர் ஆர். தருமலிங்கம் கேட்டதற்கு, வடநாட்டில்—பீகார் மாநிலத்தில், 'பிளக்கும் வெடி மருந்து' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ வெளிநாட்டு நிறுவனத்துடன் இந்திய அரசாங்கம் உடன்பாடு செய்துகொண்டுள்ளது என்றும், தென்னாட்டில் இத்தகைய ஒரு தொழிற்சாலையை நிறுவும் நோக்கம் மத்திய அரசாங்கத்திற்கு இல்லை என்றும் மத்திய அமைச்சர் தேசாய் தெரிவித்துள்ளார்.

# ‘காங்கிரஸ்காரர்கள் சொல்லியபடி செய்யமாட்டார்கள்’

## ‘கம்யூனிஸ்டுகள் செய்ய இருப்பதைச் சொல்லமாட்டார்கள்’

### ‘ஐக்கிய முன்னணி’ அமைத்தோர் இலட்சணம் பற்றி சி. பி. சிற்றரசு

**சென்னை—புதுவண்ணையில், அண்ணு படிப்பகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், ‘எங்கிருந்தோ வரும்’ உத்தரவை நிறைவேற்றும் கம்யூனிஸ்டுத் தோழர்களின் நிலையை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—**

“காங்கிரஸ்காரர்களுக்கும், கம்யூனிஸ்டுகளுக்குமுள்ள வித்தியாசம் இதுதான்—காங்கிரஸ்காரர்கள் சொல்லியபடி செய்யமாட்டார்கள்; கம்யூனிஸ்டுகள் செய்யவிருப்பதைச் சொல்லமாட்டார்கள். கம்யூனிஸ்டுகளின் குருநாதரான கார்ல்மார்க்ஸ் 20 ஆண்டுகள் பல விஷயங்களைப் படித்து நூலறிவு பெற்ருர்; அவருடைய சீடகோடிகளோ ஓராண்டுகூட படிக்கும் எண்ணம் உடையவர்களாகத் தெரியவில்லை; சொந்தமாகவும் எதையும் சிந்தித்துச் செயலாற்றுவதில்லை; எங்கிருந்தோவரும் உத்தரவை ஏற்றுதான் காரியமாற்றுகிருர்கள்.

“இவர்கள் என்றுமே ஒரே மாதிரியான கொள்கையைப் பின்பற்றுவதும் கிடையாது. மார்ச் 1-ந் தேதி சொன்னதை 2-ந் தேதி மறுப்பார்கள்; 3-ந் தேதி அதையே புரட்டிச் சொல்லுவார்கள்; 4-ந் தேதி அதை விட்டுவிடுவார்கள்; 5-ந் தேதி ‘அதுதான் சரி’ என்பார்கள்; 6-ந் தேதி வேறொன்றைச் சொல்லுவார்கள்; 7-ந் தேதி கார்ல்மார்க்சுக்குச் கோவிந்தா’ என்று கூறிச் சென்றுவிடுவார்கள்; இப்படி நாளுக்கு ஒரு கொள்கையைக் கூறுபவர்கள்; ஒரே கொள்கையை என்றும் அவர்கள் நிலைநாட்டியதில்லை.

“முதலில் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிக்கவில்லையென்று சொன்னூர்கள்; பிறகு, நேரு ரஷ்யா சென்று திரும்பியதும் அதை ஆதரித்தார்கள். புல்கானின்—குருஷ்சேவ் இந்தியா வந்துபோனதும் நேருவின் உள்நாட்டுக் கொள்கையையும் ஒப்புக்கொண்டார்கள். ஒரு நிலையான கொள்கையில்லாததால்தான் இவர்கள் தேர்தலிலே படுதோல்வியடைந்தனர். ‘எந்த அடிப்படையில் இவர்கள் தேர்தலுக்கு நிற்கிருர்கள்?’—என்று மக்கள் கேட்டதால்தான் வீழ்ச்சி அடைந்தார்கள். ‘கொள்கைக் குழப்பம்’தான் அவர்களை வீழ்ச்சி அடையச் செய்துவிட்டது.

“கார்ல் மார்க்சின் சித்தாந்தம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குத்தான் பொருந்தும். எங்கும் எப்பொழுதும் பொருந்தக்கூடியதா, அது? மார்க்சின் கொள்கை முழுவதையும் சீனு ஒப்புக்கொண்டுவிடவில்லை; அதேபோல அக்கொள்கை முழுவதையும் கேரளம் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னும் எத்தனையோ கம்யூனிஸ்டு நாடுகள் என்பவை முற்றும் ஒப்புக்கொண்டுவிட்டதாகக் கூறமுடியாது. இந்தத் தமிழ்நாட்டுக் ‘காம்ரேடு’கள்தான் எதற்கெடுத்தாலும், ‘கார்ல்மார்க்ஸ் இப்படிச் சொல்லவில்லை; அப்படிச் சொல்லவில்லை’ யெனக் கூறுகிருர்கள்.

“முதலாளிகளையெல்லாம் ஒழித்துக்கட்டி, அந்த முதலைப் போட்டு ஆட்சி நிறுவி, சமதர்மக் கொடிக்கு விசுவாசப்பிரமாணம் செய்தவுடனே, அதை ஒரு கம்யூனிஸ்டு சர்க்கார் என்று சொல்லிவிட முடியாது.

“1952-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் ஓரளவு வெற்றி பெற்றதற்குக் காரணம், அப்பொழுது உண்டாக்கப்பட்ட ஐக்கிய முன்னணியின்மீது மக்களுக்கு ஏற்பட்ட மயக்கம்தான். அப்பொழுது நாம்—தி. மு. கழகம்—நேரிடையாகத் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய முன்னணியில் பல கட்சிகள் கலந்துகொண்டிருப்பதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டதால், காங்கிரஸ் மீது வெறுப்புக் கொண்டவர்களெல்லாம் மயங்கி, ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளித்தனர். வெற்றி கிடைத்த பிறகு இந்தக் கம்யூனிஸ்டுகள் சுயரூபத்தை வெளிக்காட்டி, ‘செங்கொடிக்கு ஜே’ போடத் துவங்கிவிட்டனர். அதன் விளைவுதான், இந்தத் தேர்தலில் அவர்களைத் தோல்வி காணச் செய்தது. லெனின் சொன்னதை அப்படியே கடைப்பிடித்தார்கள். அதிலும் தோல்வி கண்டார்கள்.

“Join with other parties and destroy one by one—என்று லெனின் சொன்னூர்; அதாவது, ‘மற்றக் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து, பிறகு அக்கட்சிகளை ஒன்றன்பின் ஒன்ருக விழுங்கிவிட வேண்டும்’ என்பதே இதன் பொருள்; இந்த எண்ணத்திலேயேதான் முன்பு ஐக்கிய முன்னணி அமைத்தார்கள், கம்யூனிஸ்டு நண்பர்கள்!”

## கோவையில் ஆட்டு உரோம ஆராய்ச்சி நிலையம்

சென்னை, செப். 9—

பல்வேறு ரக ஆட்டு உரோமங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான நிலையமொன்று கோவையில் ஏற்படும். ஆடு வளர்ப்போர் தங்களுடைய உரோம உற்பத்திக்கு நல்ல விலை பெறுவதற்கு இது வசதியாக இருக்குமாம்.

## தியாகராயர் நெசவாளர் கூட்டுறவு சங்கம் திறப்பு

சேலம், செப். 9—

1—9—57 மாலை 4 மணிக்கு சேலம்—சாமிநாதபுரம் தியாகராயர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி—விற்பனை சங்கம் திரு. கே. எஸ். சுப்பிரமணி எம்.எல்.ஏ. தலைமையில் பி. டி. சிரோமணி (சேலம் டெபுடி ரெஜிஸ்திரார்) அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

தோழர் ஈ. சித்தையன் (பொதுச்செயலாளர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸ்) அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தோழர் ச. பெருமாள் சிறப்புரையாற்றினூர். தோழர் சித்தையன் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.


✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶

வடாற்காடு மாவட்ட

# தி. மு. க. 3-வது மாநாடு

செப்டம்பர் 21, 22-ந் தேதிகளில்

திருவண்ணுமலையில்

சாமி அரங்கில் நடைபெறும்

★

21—9—’57 :

## இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர் :

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சர்வாதிகாரியாகப் பணியாற்றிய

**சுவாமி அருணகிரிநாதர்**

திறப்பாளர் :

**சி. வி. எம். அண்ணுமலை**

★

22—9—’57 :

## தி. மு. கழக மாநாடு

தலைவர் :

**அன்பில்-தருமலிங்கம்**

திறப்பாளர் :

**வெ. கிருஷ்ணமூர்த்தி M A.**

★

அண்ணு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்.

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

**கட்டணம்: ரூ. 5, 3, 1.**

ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
செயலாளர்கள்

முல்லை - சத்தி
வரவேற்புக்குழு தலைவர்

✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶✶


# ‘தி. மு. கழகம்—நாட்டு மக்களின் உறவினன்’

## ‘நாட்டு விடுதலைக்குப்பாடுபடுகிறது’

## ‘சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் பொருளாதார சீர்கேட்டையும் களைந்தெறிய முயலுகிறது’

### பெண்ணுடம் பாராட்டு விழாவில் அண்ணு, ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராசு கலந்து கொண்டனர்

பெண்ணுடம் தி. மு. கழகச் சார்பில், 19—8—57-ல் விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம். செல்வராசு அவர்களுக்கும், அண்ணு அவர்களுக்கும் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது.

பெண்ணுடம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் வீ. இராமசாமி அவர்கள் பாராட்டு விழாவிற்குத் தலைமை வகித்தார்.

தென்னூற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களும், ஆனந்தன் எம். எல். ஏ. அவர்களும் கலந்துகொண்டனர்.

தலைமை உரையில் தோழர் வீ. இராமசாமி அவர்கள், விருத்தாசலம் தொகுதி மக்களுக்கு—அவர்கள் தோழர் எம் செல்வராசு அவர்களை சென்னை சட்ட மன்றத்திற்கு தேர்ந்தெடுத்தனுப்பியமைக்காக-நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அடுத்துப் பாராட்டுரை நிகழ்த்திய தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், சட்டமன்றத்தில் தி. மு. க. பெற்றுவரும் பண்புமிகு சனநாயக வளர்ச்சி பற்றிப் பேசினூர்.

அண்ணு அவர்களின் முதல் வது வருகையையும், தோழ எம். செல்வராசு அவர்களின் முதலாவது வெற்றியையும் பாராட்டி திரு. கடந்தைவாசி அவர்கள் பேசுகையில், திட்டக்குடிக்கு அண்மையிலுள்ள வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தை (எமனேரி) அரசியலாரின் புனரமைப்பு நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்க்குமாறும், இப்பகுதி ஐந்தாண்டுத் திட்ட அமைப்புகளில் சேர்க்கப்பட்டு மின்சார வசதியை அடையுமாறு ஆவன புரியக் கோரி தொகுதி மக்கள் சார்பில் திரு செல்வராசு எம். எல். ஏ. அவர்களையும், அண்ணு அவர்களையும் கேட்டுக்கொண்டார்.

தோழர் எம். செல்வராசு அவர்கள் பேசியதாவது :—

“இப்பகுதி மக்கள் தொடர்ந்து காங்கிரசை முறியடித்து வருவது கண்டு மகிழ்கிறேன். கழகத்தின் தூய கொள்கைக்குக் கழகக் காளையர் பலர் ஆக்கந் தேடுவது கண்டு பெருமைப்படுகிறேன். சிறப்பாகப் பெண்ணுடம்தான் தேர்தலில் முழுமூச்சுடன் காங்கிரசை எதிர்த்து நின்று எனக்கு வாகைசூடித் தந்தது; அதற்காக இப்பகுதி மக்களை மனமாரப் பாராட்டி, நன்றி கூறிக்கொள்கிறேன். தொடர்ந்து சென்னை சட்டமன்றத்திலும், வெளியிலும் இப்பகுதியின் வளர்ச்சிக்காக என்னுலியன்ற உழைப்பை நல்கி ஆக்கந் தேடுவேன்”

அடுத்து அண்ணு அவர்கள் பேசியதாவது :—

“இப்பகுதியில் சுடர்விட்டு வளரும் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியெய்துகிறேன். கழகத்தைக் கட்டிக் காக்க வளர்ந்துவரும் தோழர்கள் பலர் இங்கும் இருக்கிருர்கள் என்பதைப் பார்த்து களிப்பெய்துகின்றேன்.

“திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் உறவினன்; மற்றக் கட்சிகள் மக்களின் நண்பனுக மட்டுமே இருந்து வருகின்றன. குடும்பத்தில் நிலவும், சமாளிக்க இயலாத கவலையை நண்பனைகொண்டு நிவர்த்திக்க இயலாது; உண்மையான உறவினன்தான் பொறுப்போடு கவலையைத் தீர்க்க வல்லவன். அந்த உண்மையான உறவினனைப் போன்றது திராவிட முன்னேற்றக் கழகம்:

“பொருளாதாரத்தை மட்டும்கொள்கையாய்க்கொண்ட கட்சிகள் உள; சமுதாயத்தை பற்றி மட்டுமே சிந்திக்கும் செயல் கொண்டவை வேறு சில கட்சிகள்; ஆனுல்திராவிட முன்னேற்றக் கழகம் உங்கள் உறவினனைப் போன்றது. நாட்டில் நிலவும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், பொருளாதாரச் சீர்கேட்டையும் களைந்தெறிந்து உங்கட்கு முழு விடுதலையைத் தேடித்தர இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்.”

அண்ணு அவர்கள் மேலும் அரசியல் நிலைபற்றிய தெளிவான கருத்துக்களை மக்களுக்களித்தார்.

பெண்ணுடம் இதுபோன்றதொரு விழாக் கோலத்தை அண்ணுவின் வருகைக்கு முன்னர் கண்டதில்லை.

பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு முன்னர் அண்ணு அவர்கட்கு பெண்ணுடம் புதுமைப் பிரசுரத்தினர் ஒரு தேநீர்விருந்தளித்தனர்.

இலக்கியத்தைச் சுவைத்த—சுவைக்கும்விதம் குறித்து மிகவும் தெளிவாக சுவைபட அண்ணு அவர்கள் எடுத்துரைத்தார்.

இறுதியாக நன்றி கூறிய இராமமூர்த்தி அவர்கள், அண்ணு அவர்கள் இதுபோன்ற ருசிகரசுய அனுபவத்தை எப்போதும் உரைத்ததில்லை என்றும், பிரசுரத்தை வாழ்த்தியதோடன்றி இதன் வளர்ச்சிக்கு அண்ணு அவர்களின் வன்மைமிகு பேனுவும் உதவி புரிய வேண்டுமெனயும் கேட்டுக்கொண்டார்.

பெண்ணுடம் வர்த்தகச் சங்கத்தினரும், ஊராட்சி மன்றத்தினரும், திருவள்ளுவர் மாணவர் இல்லத்தினரும் தனித்தனியே அண்ணு அவர்கட்கு வரவேற்பளித்தனர்.

## மணமாகாத சர்க்கார் ஊழியர்கள் பஞ்சப்படி

### சர்க்கார் உத்தரவு

சென்னை, செப். 9—

ரூ. 250-ம், ரூ. 1,000-க்கு மேற்படாமலும் சம்பளம் பெறும் மணமாகாத சர்க்கார் ஊழியர்கள் 1—8—57-லிருந்து கிரக்கிப்படியாகக் குறைந்தபட்சம் ரூ. 37—அதிகபட்சம் ரூ. 75 என்ற வரையறைக்கு உட்பட்டு, தங்கள் சம்பளத்தில் 10 சதவிகிதம் பெறுவார்கள் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆனுல் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகளுக்கு குறைந்தபட்ச அளவு ரூ. 40-ஆக இருக்கவேண்டும்.

இந்த ரக அரசாங்க ஊழியர்கள், சம்பள விகித உயர்வு மூலம் சம்பளம் ரூ. 250-க்கு உயர்த்தப்படும்போது தற்போதைய விதிகளின்படி அவர்கள் ஊதியம் திடீரென குறைந்துவிடாமல் செய்யவே இந்த ஏற்பாடு.

# ‘மூன்றுகோடி இதயங்களை ஒன்ருக்கிய முழுத் தமிழன்’

## ‘நகைச்சுவை நடிகர்களுக்கு மதிப்புத் தேடித் தந்தவர்’

### கலைவாணர் இரங்கற்கூட்டத்தில் அப்பாதுரையார்

6—9—57 மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கலைவாணர் என்.எஸ்.கே. அனுதாபக் கூட்டத்தில் பேசிய பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

“அரை நூற்ருண்டு அறிவின் திருஉருவான ஒரு பெரியாரை—கலைஞர் தலைவரை இன்று நாடு இழந்திருக்கிறது. நம் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதற்கே நாம் இங்கு கூடியுள்ளோம். நாம் இங்கு கூடுவதற்குக் காரணம் கலைவாணர் அவர்கள் கலை மூலம் அறிவுப் பிரசாரம் செய்தவர் என்பதனுலேயேதான்.

“கலைவாணர் ஒரு பெரிய அறத் திருஉருவம். அவர் ஒரு முழுத் தமிழர். அவரை முழுத் தமிழர் என்பதற்குக் காரணமுண்டு. அவருக்கு எல்லாத் தமிழரும் ஒருசேர வந்து கலங்கி, கண்ணீர் மல்கி தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர். இத்தகைய முழுத் தமிழருக்கல்லாமல் வேறு யாருக்கும் இத்தகைய பெருமை கிடைக்காது.

கலைவாணருக்கு ஈடாக 1000 மனிதரை வைத்தாலும் முடியாது. கலைவாணரைச் சார்ந்து ஒரு குடும்பம் வாழ்ந்தது. நாடு முழுவதுமே அவர் குடும்பம்தான்.

“நாடகத் துறையில் இராஜ பார்ட், இராணி பார்ட், கள்ள பார்ட் என்ற பாத்திரங்களில் நடிப்பவர்களுக்கெல்லாம் நல்ல மதிப்பு உண்டு. ஆனல், ‘விதூஷகர்’, ‘கோமாளி என்று சொல்லப்படும் நகைச்சுவை நடிகர்களுக்கு அந்தக் காலத்தில் மதிப்புக் கிடையாது. இது இந்த நாட்டில் மட்டுமல்ல; மேலை நாடுகளிலும் இந்த நிலைதான். இந்த நிலையை முதன்முதல் மாற்றிய முதல்வர் உலகத்திலேயே நம் கலைவாணர்தான். அவருடைய அரிய பணியின் மூலமே இன்று திரையுலகிலும் நாடக அரங்குகளிலும் நகைச்சுவை நடிகர்களுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

“மேலும், கலையையும், நகைச்சுவையையும் வாழ்க்கையோடு ஒட்டவைத்த ஒரே ஒரு கலைஞர் உலகிலேயே நம் கலைவாணர்தான். நடிகருக்கும் கொள்கையுண்டு என்பதை அவர் நிலைநாட்டினர். அவர் எதைப் பேசினரோ அதன்படி நடந்து காட்டினர். அவர் எப்படி வாழ்க்கையில் நடந்தாரோ, அப்படி நடித்துக்காட்டினர். எதை நடித்தாரோ அதைப் பேசினர். இப்படி அவர் செய்தவையெல்லாம் நாட்டுக்குப் பயன்பட்டன. அவருடைய பணியால் பெரிய வாழ்வு வாழ்ந்தது நம் நாடு என்று சொல்லலாம்.

“அவரே தனக்கு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கிறர். அப்படி அவர் ஏற்படுத்திய நினைவுச் சின்னம் சாதாரணமானதல்ல; கல் மண்டபம்; வைரக்கோட்டை! மூன்று கோடித் தமிழரையும் ஒரே உருவமாக்கிச் சென்றிருக்கிறர். மூன்று கோடி மக்களின் மூன்று கோடி மூளைகளையும் ஒரே மூளையாக, மூன்று கோடி இதயங்களையும் ஒரே இதயமாக ஆக்கிச் சென்றிருக்கிறர். இது தான் அவர் எழுப்பிய நினைவுச் சின்னம்.

“அவரது எண்ணமும் கொள்கையும் பாழ்பட்டுவிடவில்லை. அவர் வளர்த்த கலையும் இனி பாழ்பட்டுவிடாது. அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்ய நாடு காத்திருக்கிறது. நாமெல்லாம் அவர் வழி செல்லுவோமாக!”

## ரஷ்யா எதிர்க்குமாம்!

கராச்சி, செப். 9—

இந்தியா—பாகிஸ்தானுக்கிடையே உள்ள காஷ்மீர் தகராறு பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபை விவாதிக்கும் கட்டம் ஏற்பட்டுள்ளது.

காஷ்மீருக்கு ஐ. நா. படையை அனுப்பி அமைதியைப் பாதுகாத்து, காஷ்மீர் மக்களின் விருப்பத்தை வாக்கெடுப்பு மூலம் அறியவேண்டும் என்பதற்கான ஒரு தீர்மானம் சபைமுன் விவாதத்திற்கு வரும் என்று தெரிய வருகிறது.

‘இத்தீர்மானத்திற்கு ரஷ்யா தன் எதிர்ப்பைத் தெரிவிக்கும்’ என்று மாஸ்கோவிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## சென்னை உயர்நீதிமன்றம்

### மேலும் இரு நீதிபதிகள் நியமனம்

புதுடில்லி, செப். 9—

சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மேலும் இரு நீதிபதிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

ஓய்வுபெற்ற மாவட்ட—செஷன்ஸ் நீதிபதியான சுப்பிரமணிய நாடார், மற்றும் மாவட்ட—செஷன்ஸ் நீதிபதியாயிருக்கும் கணபதியா பிள்ளை ஆகிய இருவரும் உயர்நீதி மன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டு இலாகா அறிவித்துள்ளது.

## வட சென்னை தேர்தல் வழக்கு

சென்னை, செப். 10—

வடசென்னைத் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரசாருக்கு எதிராக, கழக அபேட்சகர் தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தொடுத்துள்ள வழக்கு, நாளை (11—9—57) பிற்பகல் நடைபெறும்.

## கழகக் கூட்டம்

★

**தாராசுரம்:**
கடைவீதி அருகில்
11—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்:
எஸ். விசயராகவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கே. கே. நீலமேகம்
அன்பில் தர்மலிங்கம்
சி. ஜம்பு

## அண்ணு

### சுற்றுப்பயணம்

செப்டம்பர்
11: காலை—அனந்தம்பேட்டை
பகல்—எலந்தங்குடி
12: காலை—கள்ளக்குறிச்சி
மாலை—வேலூர்
14: மாலை—சுப்பிரமணியபுரம்
16: காலை—காஞ்சீபுரம்
18: மாலை—கீரனூர்
இரவு—புதுக்கோட்டை
19: மாலை—திட்டச்சேரி
20: மாலை—சின்னதாராபுரம்
21, 22: திருவண்ணுமலைமாநாடு

துணைப் பொதுச்செயலாளர்

## என். வி. நடராசன்

### சுற்றுப்பயணம்

செப்.
13: ஜோலார்பேட்டை
காலை—திருமணம்
மாலை—பொதுக்கூட்டம்
14: காரியாங்குடி (திருவாரூர்)
15: நிலக்கோட்டை
16: காரைக்கால்
காலை—திருமணம்
மாலை—பொதுக்கூட்டம்
17: திருவள்ளூர்
18: சென்னை
19: பழந்தண்டலம்
21—22: திருவண்ணுமலைமாநாடு

## ஈ. ஆர். கிருஷ்ணன்

### நிகழ்ச்சிகள்

செப். 11: காலை—மன்னூர் பாளையம் திருமணம்; மாலை—கெங்கவள்ளி கூட்டம்; 13: மாலை அக்கரகாரநாட்டாமங்கலம் கூட்டம்; 15: சேலம்; 16: காலை—நீர்முள்ளிகுட்டை திருமணம்; 19: மல்லசமுத்திரம் கூட்டம்; 22: சேலம்.

## சேலம் நகர தி. மு. க.

உட்கிளை செயலாளர்களுக்கு:

“தலைமை நிலைய அறிக்கைப்படி, சேலம் நகரில் 22—9—57-ல், அந்தந்த வட்டங்களில் ‘திராவிட நாடு’ விடுதலை வாரத்தை கொடியேற்றி, தோரணங்கள் கட்டி, குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாகக் கொண்டாட வேண்டும்”

என, நகர செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் கேட்டுக்கொள்கிறர்.

அந்தந்தக் கிளைகளின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், செயற்குழுவினர் விபரத்தை உடன் அனுப்ப வேண்வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொள்கிறர்.

## மணவழகர் மன்றம்

11—9—57 புதன் மாலை 6-30 மணிக்கு பெத்துநாய்க்கன் பேட்டை முருகேச முதலித்தெரு 2-ஆம் எண்ணுள்ள கட்டடத்தில் ‘திருக்குறள் வகுப்பு’ புலவர் கா. சி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

## அண்ணு சொல்லவை

11—9—57 மாலை 6-30 மணியளவில், வடசென்னை கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில் (59, சஞ்சீவிராயன் கோவில் தெரு) அண்ணு சொல்லவையின் சொற்பயிற்சிக்கூட்டம் நடைபெறும்.

# ‘தவறு செய்துவிட்டேன்’

## மக்கள் சபையில் இரயில்வே மந்திரி ஒப்பம்

புதுடில்லி, செப். 9—

இரயில்வே மந்திரி செகசீவன்ராம் அவர்கள், அண்மையில் நடைபெற்ற விவாதம் ஒன்றின் போது தவருன விவரம் தந்துவிட்டதை இன்று மக்கள்சபையில் ஒப்புக்கொண்டிருக்கிறர்.

டாடா கம்பெனியாரிடம் இரயில்வேய்க்கு வாங்கிய எஞ்சின்கள் விலை மிக அதிகமாக இருந்தது பற்றி கடந்த வாரத்தில் இரண்டு மணி நேரம் மக்கள்சபையில் விவாதம் நடைபெற்றது. அப்போது, ஆஜ்மீர் இரயில்வே தொழிற்சாலையில் எஞ்சின் உற்பத்தி, 1940-ம் ஆண்டிலேயே நின்று போய்விட்டதாக மந்திரி தெரிவித்திருந்தார்.

ஆனல், “இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய பெரோஸ் காந்தியோ, 1950-ம் ஆண்டுவரை அங்கு எஞ்சின் உற்பத்தி இருந்ததாகச் சுட்டிக் காட்டினர்.

அது உண்மைதான் என்றும், தான் தந்த விவரம் தவருனது என்றும், மந்திரி செகசீவன்ராம் ஒப்புக்கொண்டார்.

# ‘பசி’த்தவரைப் ‘புசி’க்கச் செய்து ரசித்தவர் கலைவாணர்!

## ‘சிறந்த பாடலாசிரியர்; கதாசிரியர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்’

### கலைவாணர் இரங்கற்கூட்டத்தில் கண்ணதாசன்

கடந்த 6—9—57 அன்று, சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த மாபெரும் அனுதாபக் கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் அவர்கள் ஆற்றிய உருக்க உரை அடியில் தரப்பட்டுள்ளது:—

“நம் கலைவாணர் அவர்கள், ‘பசி’ என்று வந்தவர்க்கு, ஒருபிடி சோறு கொடுத்துப் ‘புசி’ என்று கூறி, புசிப்பதைக் கண்ணலே கண்டு ரசிப்பவர்; மற்றவர்களும் அவ்வாறு ரசிக்க வேண்டும் என்று கூறுபவர்.

“குறளுக்கு அவர் புதுப்புது உரைகளைக் கண்டார். குறளுக்கு அவர் கூறும் சில புதுப் பொருள்கள் வியப்பைத் தருவதோடு, சிந்தனையையும் தூண்டக்கூடியவையாக இருக்கும்.

“திரைப்படத்தின் மூலம் அவர் செய்திருக்கும் சமுதாயச் சீர்திருத்தங்கள் ஒன்றிரண்டல்ல; ‘உத்தம புத்திரனி’ல் நம் கலைவாணர் பார்ப்பன வேடத்தில் வந்து, ஒரு ஆதிதிராவிடப் பெண்ணைக் காதலிப்பதும், ‘மனேன்மணி’யில், எருமை மாடு மனித உருப் பெற்றுவருவதுபோல வந்து காதலியின் தந்தையை ஏமாற்றத்துக்குள்ளாக்குவதும், இன்னும் இவை போன்ற பல நிகழ்ச்சிகளும் புராணப் புரட்டுக்களுக்கும், வைதீக மனப்பான்மைக்கும் அவர் வைக்கும் வெடியாகும். ‘படிப்பது இராமாயணம்; எடுப்பது பணப் பெட்டியா?’ என்று அவர் ஒரு படத்திலே கூறி, பக்தர்களின் போக்கை அம்பலமாக்கியிருக்கிறர்.

“‘பணம்’ என்ற படத்தில், ‘பணமே பணமே எங்கு சென்ருயோ; திருப்பதி உண்டியலுக்குச் சென்ருயோ; சூடம் சாம்பிராணியாய்ப் புகைந்தாயோ’ என்று அவர் பாடும் பாட்டு, எவ்வளவு கருத்தடங்கியதாக இருக்கிறது?

“நம் கலைவாணர் சிறந்த பாடல் ஆசிரியர் என்பது பலருக்குத் தெரியாது. அவர் பல கருத்துள்ள பாடல்களை மிக அழகாக எழுதிப் பாடியிருக்கிறர். கதாசிரியர்களும் கலைவாணரின் யோசனைகளைக் கேட்டே தங்கள் கதைகளில் பல கட்டங்களை அமைப்பதுண்டு. கதாசிரியர்கள் நல்ல நடிகர்களைக் கலந்து கொண்டு கதை எழுத வேண்டும் என்ற கருத்தைத் தோன்றச் செய்தவர் நம் என். எஸ். கே. அவர்கள்தான்.

“என். எஸ். கே. அவர்களைப் போலவே, நம் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் கதாசிரியர்களுக்குப் பல யோசனைகளைக் கூறி, ஒத்துழைத்து, கதையைச் சிறந்த முறையில் உருவாக்கச் செய்பவர் ஆவார்.

“தேர்தல் பிரசாரத்துக்காகச் சில பாடல்கள் எழுதவேண்டும்; குறிப்பாக, ‘பத்தாண்டு காங்கிரஸ் ஆட்சியில் பட்டபாடு போதாதா?’ என்ற அடியை அமைத்து ஒரு பாட்டு எழுத வேண்டும் என்று கலைவாணர் அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நான் பல அலுவல்களின் காரணமாக உரிய நேரத்தில் அவ்வாறு எழுதித் தர இயலாமற் போயிற்று. பிறகு அவரே, தன் கருத்துக்களைப் பாடலாக அமைத்து, அதை என்னிடம் பாடிக் காட்டினர். மிக மிக அழகாக அவர் எழுதியிருந்தார். அந்தப் பாட்டு தேர்தல் பிரசாரத்தின்போது பல இடங்களில் கலைவாணரால் பாடப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம்.

“திரைப்படம் எடுக்கும்போது, அவர் நடிக்க ‘செட்’டுக்குள் நுழைந்தால் திடீரென ஒரு புதிய கருத்தைச் சேர்த்து, வசனத்தில் அமைத்துக்கொள்வார். அக்கருத்து பிறகு படத்தில் மிக நல்ல முறையில் ரசிக்கக்கூடியதாக இருக்கும். இதைப் பற்றி பல படமுதலாளிகள் என்னிடம் கூறியிருக்கின்றனர்—‘என். எஸ். கே. வெளியில் (ரிகர்சலில்) நடிப்பதைவிட, ‘செட்’டுக்குள் நடிக்கும்போது அபாரமாக நடித்துவிடுகிறர்’—என்று!

“ஒரு சமயம் அவர் ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருக்கும்போது, கதை சொல்லுவது போன்ற ஒரு கட்டத்தில், புதியதாக ஒரு கதையை (கற்பனையாக)ச் சொல்ல ஆரம்பித்துவிட்டார். அதைக் கேட்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்து ரசித்தார்கள்.

“நம் கலைவாணர் அவர்கள் நடிகர் சங்கத்திற்கு இருமுறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதே அவரது ஈடுஇணையற்ற சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். அவர் தன் வாழ்நாளில் கடைசிவரை துணிச்சலாக எதையும் பேசக்கூடியவராகவும், நடக்கக்கூடியவராக இருந்தார்.

“அவர் ஏழையாகப் பிறந்தவரானதால், மற்றவர்படும் துன்பத்தையறிந்துகொண்டு தக்க உதவிகளைச் செய்துவந்தார். தன்னைச் சார்ந்திருந்த நடிகர்களை தானே உடனிருந்து தாய்போல உணவூட்டி அவர்களைக் காப்பாற்றிவந்தார்.

“கலைவாணர் மறைவு கேட்டு இந்த நாட்டிலுள்ள அத்தனை ஏடுகளும் அழுதன; அனைத்திந்திய வானெலி கூட அழுதது. எல்லாத் தலைவர்களும், மக்களும் அழுதனர்; கம்ப இராமாயணத்தில் கம்பன் வருணிப்பதுபோல, ‘இந்த நாட்டில் புல்லும் அழுதது; பூனையும் அழுதது; எல்லாம் அழுதன’—என்று கூறக்கூடிய அளவு நாடு காட்சியளித்தது. இதைவிட நம் கலைவாணரின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு வேறு என்ன வேண்டும்?

“எனவே, எதிர்காலத்தில் கலைவாணரின் இலட்சிய வழி சென்று நாம் பாடுபடுவோமாக!”

## கோவை நகர தி. மு. க.

கிளைக் கழகத் தோழர்களுக்கு:

“15—9—57-ல் அண்ணு அவர்கள், தவிர்க்க முடியாத நிலையில் காஞ்சியில் இருக்கவேண்டியுள்ளதால், மேற்படி தேதியில் கோவையில் நடைபெறவிருந்த அண்ணு நிகழ்ச்சிகள்யாவும் 13—10—57-ல் நடைபெறும். இந்தத் தேதி மாற்றம் அண்ணு அவர்களின் ஒப்புதலின் பேரில் செய்யப்பட்டுள்ளது.”

என்று, கோவை நகர தி. மு. க. செயலாளர் தோழர் சே. அ. இராசமாணிக்கம் தெரிவித்துக்கொள்கிறர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.